

வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

செயற்திறன் அறிக்கை - 2021

இல:01,டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10

உள்ளடக்கம்

1. வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு 3

1.1. அறிமுகம் 3

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று 4

1.3. பிரதான செயற்பாடுகள் 5

1.4. நிறுவன விளக்கப்படம் 6

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் 7

1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் 7

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரங்கள் 7

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 8

2.1. சிறப்பான வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் 8

3. 2021 ஆம் வருடத்துக்கான ஒட்ட மொத்த நிதிச் செயலாற்றுகை 18

3.1. நிதி செயலாற்றுகை கூற்று 18

3.2. நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று 20

3.3. நிதி பாய்ச்சல் தொடர்பான கூற்று 21

3.4. நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 22

3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை 22

3.6. ஒதுக்கீட்டு நிதியங்களைப் பயன்படுத்தவதன் செயலாற்றுகை 22

3.7. நி.பி .208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்துக்கு மாவட்ட செயலகத்துக்கு மாகாண சபைக்கு கையளிக்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகள் 23

3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 23

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 23

4. செயலாற்றுகை சுட்டிகள் 24

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 24

5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதன் செயலாற்றுகை 25

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்புடைய இலக்குகள் . 25

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் 27

6. மனித வள விபரம் 28

6.1. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் 28

6.2. முழு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது அதிகப்படியான மனித வளம் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதம் 28

6.3. மனித வள அபிவிருத்தி 29

7. இணக்க அறிக்கை 30

1. வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

1.1. அறிமுகம்

அரசாங்கத்தின் 'சௌபாக்கியத்தின் நோக்குகை' கொள்கைப் பிரகடனத்தில் காட்டப்படுகின்ற விசேட முன்னுரிமைச் செயற்பாடுகளை செயற்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டுள்ள இந்த அமைச்சானது, நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியான பங்களிப்பைச் செய்கின்ற, மக்களது போக்குவரத்து தேவைகளுக்கு அத்தியாவசியமான பிரதான நான்கு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. அதனிடையே இலங்கை போக்குவரத்துச் சபை, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் என்பன பொதுமக்களுக்கு மிக அருகேயிருந்து சேவையாற்றுகின்ற நிறுவனங்களாகக் கருதப்படுவதுடன், லக்திவ இன்ஜனியரிங் கம்பனியானது, பஸ் வண்டிகள், மற்றும் வாகனங்களைத் திருத்தியமைத்தல், சேவை நடவடிக்கைகளை செய்தல் ஊடாக போக்குவரத்து துறைக்கு மறைமுகமான தனது பங்களிப்பை வழங்குகின்றது. இந்த நான்கு நிறுவனங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து, போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய பங்குதார நிறுவனங்களது பங்களிப்புடன், பொதுமக்களுக்கு வினைத்திறனானதும் வசதியானதுமான போக்குவரத்து சேவையை வழங்குவதன் ஊடாக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான கருத்திட்டங்களை அடையாளங் காணுதல், கருத்திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடுகளைச் செய்கின்றது. மாதத்திற்கு இரு தடவையும், மாதாந்தமும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தி நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுனகின்ற கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் இந்த அமைச்சின் ஊடாக வழங்கப்படுகின்றது.

நவீன தொழிநுட்பத்தை நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஸ்மார்ட் தொழிநுட்ப முறைகளை பிரபல்யப்படுத்துவதன் ஊடாக சேவைபெறுநர்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க முடியும் என்பதுடன், இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்தை குறைப்பதற்கும், நிறுவனம் மட்டில் மக்கள் கொண்டுள்ள எதிர்மறையான மனப்பாங்குகளை குறைத்து, நேர்மறையான எண்ணங்களைக் கட்டியெழுப்புவதற்கும், இதன் மூலம் வாய்ப்புகள் கிட்டும். மேலும் இதன் கீழ், ஒன்லைன் முறை ஊடாக முன்னரே நேரத்தை ஒதுக்கி தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல், நடமாடும் சேவைகள் ஊடாக மக்களிடம் சென்று சேவைகளை வழங்குதல், மற்றும் நவீன ஆவணக் காப்பு முகாமைத்துவத் திட்டத்தின் ஊடாக பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே வீதிப் பாதுகாப்புக்கான நிகழ்ச்சித் திட்டங்களைப் போன்றே, பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள போக்குவரத்து முகாமைத்துவ குழு ஊடாகவும் பொதுமக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்யும் பொறுப்பு இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்த அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ், நிருவாகம், அபிவிருத்தி, கணக்கு, திட்டமிடல், தொழிநுட்பம் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களது பங்களிப்புடன் 2021ஆம் ஆண்டில் மிகுந்த வினைத்திறனானதும் உற்பத்தித்திறன்மிக்கதுமான பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், தற்போதுள்ள சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து, பொதுப்போக்குவரத்து சேவையில் மக்கள் விருப்பத்துடன் ஈடுபடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று

தொலைநோக்கு

பொதுமக்களை மையாகக் கொண்ட போக்குவரத்துக் கட்டமைப்பைக் கொண்ட ஒரு இலங்கை

பணி

அரச மற்றும் தனியார் முதலீடுகள் ஊடாக, நவீன, ற்றுச்சூழலுக்கேற்ற பாதுகாப்பானதும் சிறந்ததுமான போக்குவரத்துச் சேவைக்கான கொள்கைகளை வகுத்தல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், செயல்முறைகளை பரிசோதித்தல், ஒழுங்குபடுத்தல் ஊடாக நிலைபேறான தன்மையுடன் பேணிச் செல்லுதல்.

1.3. பிரதான செயற்பாடுகள்


போக்குவரத்து அமைச்சர் அவர்களதும், வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள், புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் ஊர்தி கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் அவர்களதும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் பேரில் "வினைத்திறன்மிக்க மற்றும் சூழல்நேயம் மிகுந்த பொதுப் போக்குவரத்துத் தொகுதியொன்றுக்காக போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்வதற்கு" உரியசட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இசைவாக வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள், புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில எனும் விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகளை உருவாக்குவதற்கு உதவுதல், தேசிய பாதீடு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயப் பரப்புகள் மற்றும் பணிகளுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், செயற்படுத்தல், தொடராய்வுசெய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

1.3.1. அதிவிசேட முன்னுரிமைகள்

அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களது ஆணைக்கு அமைய, 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ஆம் திகதியுடையதாக வெளியிடப்பட்ட இலக்கம் 2187/27ஐ உடைய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளுக்கு அமைய கையளிக்கப்பட்டுள்ள அதி விசேட முன்னுரிமைமிக்க துறை தொடர்பில் இவ் அமைச்சினால் மிக நுணுக்கமாகவும், ஆழமாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

1) இலங்கைப் போக்குவரத்துச் சபையை இலாபம் ஈட்டக் கூடிய நிறுவனமாக நவீனமயப்படுத்தல் மற்றும் பிரதான பஸ்தரிப்பு நிலையங்களில் பொது வசதிகளை விருத்திசெய்தல்
2) இன்றைய பஸ் உள்ளடக்கக் குழாமை மீள்தாபித்து கொழும்பு மற்றும் பிரதான நகர எல்லைகளினுள் ஓடச் செய்வதற்கு சூழல்நேய புதிய பேரூந்துகளை அறிமுகப்படுத்தலும் தனியார் பயணிகள் போக்குவரத்துச் சேவையினையும் "பசுமை போக்குவரத்து" கொள்கைக்கு இசைவாக மேற்கொள்வதற்குத் தேவையான செயன் முறைகளைத் தயாரித்து செயற்படுத்துதல்
3) புகையிரதப் பெட்டிகள், பேருந்துகள் மற்றும் மோட்டார் வாகனங்களை உள்ளூர் ரீதியில் தயாரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் போக்குவரத்துச் சேவையொன்றை உருவாக்குதல்.
4) பாடசாலை பேருந்துச் சேவைகளை மாணவர்களுக்கு பாதுகாப்பை வழங்கக் கூடிய தர நிலைக்கு மேலெழச் செய்தல்
5) கிராமிய பிரதேசங்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுவதை விதிமுறைப்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையை பயணிகள் மற்றும் பண்டங்களை ஏற்றிச் செவ்வதற்கென பயன்படுத்துதல்
6) பயணிகள் மற்றும் ஊழியர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படும் வகையில் போக்குவரத்துச் சேவைகளை உயர்ந்த தர மட்டத்தை அடையக் கூடிய வகையில் ஒழுங்குபடுத்தல்.
7) சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போதும், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் போதும் ஏற்படக் கூடிய மோசடிகளை அகற்றி பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை வழங்குதல்

1.4. நிறுவன விளக்கப்படம்



1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

1. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

1. இலங்கைப் போக்குவரத்துச் சபை
2. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்
3. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் நிறுவனம்

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரங்கள்

வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் காணப்படுவதில்லை

கருத்திட்டத்தின் பெயர்	கொடை வழங்கும் முகவர் நிறுவனம்	கருத்திட்டத்தின் விலை மதிப்பீடு	கருத்திட்டக்கால எல்லை
இந்திய ஒதுக்கீட்டின் கீழ் இ.போ.சபைக்கு 500 பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டமை	இந்தியன் எக்சிம் வங்கி	• வெளிநாட்டு கடன் உதவி மதிப்பீட்டுத் தொகை (12) - USD 15.03 மில். • உள்நாட்டு நிதியம் (17) - ரூபா மில்லியனில் 1050	2018 – 2022

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. சிறப்பான வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

நாட்டின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பை நல்கும் முன்னணி இராஜாங்க அமைச்சு என்ற வகையில், ஒப்படைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பிற்கமைய பொதுமக்களுக்கு வினைத்திறனானதும் வசதியானதுமான சேவையை வழங்குவதற்கும், பொருளாதார செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்தலும், இந்த அமைச்சின் பிரதான நோக்கங்களாகும். இந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு இடைக்கால மூலோபாயத் திட்டங்களின் கீழ் பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் இதுவரை அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், அவற்றுள் சில தற்போது மிக வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றன. இந்த அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்ற ஏனைய நான்கு நிறுவனங்களும் சேவைபெறுநர்களுக்கு மிகுந்த நெகிழ்ச்சியானதும் மிக அண்மித்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான, செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், ஸ்மார்ட் தொழிநுட்பத்தின் ஊடாக மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் சேவைகளை வழங்குவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதனடிப்படையில், இந்த இராஜாங்க அமைச்சானது அதற்குரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பல நிகழ்ச்சித்திட்டங்களை 2021ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியது. ஆதன்போது பெற்றுக் கொண்ட விசேட வெற்றிகள், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் சாராம்சப்படுத்திய குறிப்பொன்று இந்த செயலாற்றுகை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

2.1.1. அடைந்துகொள்ளப்பட்ட விசேட வெற்றிகள்

2.1.1.1. விசேட கருத்திட்ட அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் அனுமுதியைப் பெற்றுக் கொள்ளுதல்

இந்த அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் விசேட கருத்திட்டப் பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு கருத்திட்ட எண்ணக்கரு பத்திரங்கள் உரிய அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவை கீழே காட்டப்பட்டுள்ளன.

- **பசுமை போக்குவரத்து எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தும்பொருட்டு கொழும்பு வர்த்தக நகரத்தை அண்மித்ததாக மின்சார மற்றும் ஹைபிரிட் பஸ் வண்டி கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.**

தற்போதைய அரசாங்கத்தின் 'சௌபாக்கியத்திற்கான நோக்குகை' கொள்கைப் பிரகடனத்தை ஒட்டியதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதலும், சர்வதேச சுற்றுச்சூழல் பிரகடனங்களுக்கமைய காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்காக தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளுக்கு இயைபாதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு பெரும்பாக வர்த்தக நகரத்தில் பிரேரிக்கப்பட்ட, நிறுத்திவிட்டுச் செல்லும் வசதிகளைக் கொண்ட நகர பஸ் வண்டி சேவையொன்றை (Park & Ride City Bus Service) ஆரம்பித்தல் இந்தக் கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாக நகரப் பிரதேசத்தை உள்ளடக்கியதாக 7 பிரதான பிரவேச வழிகள் ஊடாக ஓட்டுவதற்காக, மின்சாரத்தில் இயங்குகின்ற குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளைக் கொண்ட 26-30 ஆசனங்களைக் கொண்ட 30 பஸ் வண்டிகளும், 26-30 ஆசனங்களைக்

கொண்ட ஹைபிரிட், தாழ்வான அடிப்பாகத்தைக் கொண்ட 70 பஸ் வண்டிகளையும், 42-45 ஆசனங்களைக் கொண்ட ஹைபிரிட், தாழ்வான அடிப்பாகத்தைக் கொண்ட 40 பஸ் வண்டிகளையும் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கருத்திட்டத்திற்குத் தேவையான நிதியை 2022ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் போக்குவரத்து அமைச்சிற்கான 114-2-3-12-2506 என்ற செலவுத் தலைப்பில் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.2000 மில்லியன் ஒதுக்குகளுள், 1700 மில்லியன் ரூபாய்களை பயன்படுத்தி முதலாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்கள் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான தேசிய வரவு செலவு திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இபோசபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த கருத்திட்டத்தின் பெறுகை செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **சாரதி கிராம கருத்திட்டம்**

தெற்காசிய பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதுடன், அதற்கான பிரதான காரணம் சாரதிகளின் கவனமின்மை என்பது தெளிவாக அறிய முடிகின்றது. இது தொடர்பில் கவனம் செலுத்திய இவ்வமைச்சானது, சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட, எண்ணக்கரு ரீதியானதும் செயன்முறைப் பயிற்சியையும் கொண்ட முறையான சாரதிப் பயிற்சியின் ஊடாக, அதாவது அனைத்தும் ஒரே இடத்தில் இடம்பெறுகின்ற சாரதி கிராமம் எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்காக இந்தக் கருத்திட்டத்தைத் தயாரித்துள்ளது. இந்த சாரதி கிராமம் கருத்திட்டத்தை ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில், 24 மாவட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், கம்பஹா, களுத்துறை, குருணாகல், மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அரச – தனியார் பங்குபற்றுதலுடன் நடைமுறைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தேசிய திட்ட அமுலாக்கல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள இந்த கருத்திட்டத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிலர் இதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

- **மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு டிஜிட்டல் ஆவணக் காப்பகமொன்றை நிருமாணிக்கும் கருத்திட்டம். (Digital Archive)**

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் இதுவரை 12 மில்லியன்களுக்கு மேற்பட்ட வாகன கோவைகள் காணப்படுவதுடன், இவை முறையாக வகைப்படுத்தப்பட்டு அடுக்கி வைக்கப்படாததன் காரணமாக தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் மிகக் கடிமாக உள்ளது. பொலிஸ் மற்றும் பிற சட்டரீதியான நிறுவனங்களுக்கு இந்த கோவைகள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றை சமர்ப்பிக்க முடியாமல் போகும்போது, இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இந்நிலைமையானது பல்வேறு முறைகேடான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு காரணமாக அமையும் என்பதால், தகவல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலான டிஜிட்டல் ஆவணக் காப்பகமொன்றை (Digital Archive) அமைத்து பேணிச் செல்வதற்கும், கடித கோவைகளை பாதுகாத்து முகாமைத்துவம் செய்யும் பொருட்டும் கொள்கலன்கள் ஊடாக (Container Record Room) ஆவணக் காப்பகமொன்றை அமைப்பதற்கு இத்திணைக்களம் எதிர்பார்க்கின்றது. இதற்காக 2022ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் ரூ.800 மில்லியன் ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு கருத்திட்ட பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. எவ்வாறாயினும் போக்குவரத்து அமைச்சிற்கு 2022ஆம் ஆண்டின்

வரவுசெலவுத்திட்டத்தின் 114-2-3-12-2506 என்ற செலவுத் திலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.2000 மில்லியன் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டுள்ள உப கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

01. கொள்கலன்களைப் பயன்படுத்தி (Containers) வாகன கோவைகளை களஞ்சியப்படுத்துவதற்கு 90 மில்லியன்கள் செலவிடப்படவுள்ளது.
02. ஸ்மார்ட் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி வரிசை முகாமைத்துவ முறைகள் உள்ளிட்ட நவீன வசதிகளை அபிவிருத்தி செய்தல் - 100 மில்லியன் ரூபாய்கள்

- **வாகனங்கள் வீதிகளில் ஓட்டுவதற்கான தகுதிகாண் மத்திய நிலையங்களைத் தாபித்தல்.**

தற்போது மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வாகன புகைப்பரிசோதனை திட்டத்தை மென்மேலும் முறைமைப்படுத்தி வாகனங்கள் வீதிகளில் செலுத்துவதற்கான தகுதியைப் பரிசோதித்து அனைத்து வாகனங்களுக்கும் சான்றிதழ்களை வழங்குவதற்கு இந்த திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வாகனங்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் குறைக்கப்படுவதுடன், வாகனங்களை உரிய முறையில் பராமரிப்பதற்கு வாகன உரிமையாளர்கள் கவனம் எடுப்பதுடன், வாகனங்களது எரிபொருள் பாவனையை வினைத்திறனாக்குதல் உள்ளிட்ட ஏனைய நன்மைகளை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அரச-தனியார் பங்குடமையின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்த கருத்திட்டத்திற்கு வழிகாட்டல் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு, தேசிய கொள்கைத்திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் விதப்புரைகளுக்கமைய அதற்கான ஆய்வு அறிக்கையொன்றை தாயரிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **அம்பாறை றயர் தொழிற்சாலையை மறுசீரமைக்கும் கருத்திட்டம்**

இ.போ.சபைக்கு ஒரு மாதத்திற்கு, 10,500 முன்னரே பொருத்தப்பட்ட றயர்களுக்கான (Pre –cured) கேள்வி காணப்படுகின்றதெனினும், அம்பாறை றயர் தொழிற்சாலையில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற மாதாந்த உற்பத்தி 1100 மட்டுமே. தேவையான ஏனைய மிகுதி றயர்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதால், அதற்காக மாதாந்தம் 69 மில்லியன்கள் செலவிடப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ் அம்பாறை தொழிற்சாலையில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற காலங்கடந்த இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன இயந்திரப் பொறிமுறைகளை பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் உற்பத்தியின் அளவினை 75%ஆல் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதனடிப்படையில் தற்போதுள்ள விலைகளின் கீழ் இந்த றயர் தொழிற்சாலையை ஆரம்பித்ததன் பின்னர் இபோசபையானது வருடத்திற்கு 164 மில்லியன் ரூபாய்களை சேமித்துக் கொள்ள முடியும்.

200 மில்லியன் ரூபாய் ஒதுக்கின் கீழ் 2022ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த கருத்திட்டமானது இரண்டு கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுதப்படுவதற்கு தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. எவ்வாறாயினும் 2022ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக 50 மில்லியன் ரூபாய்கள் அம்பாறை றயர் தொழிற்சாலை புனரமைப்பு செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான பெறுகை நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

- **இலங்கை பஸ் வண்டிகள் திருத்த நடவடிக்கைகளுக்காக 500 என்ஜின் தொகுதிகளை கொள்வனவு செய்தல்.**

இபோசபைக்குச் சொந்தமான ஏறத்தாள 45மான பஸ் வண்டிகள் (3130) 12 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்ததும், பொருளாதார ரீதியில் இலாபகரமற்றதாகவும் காணப்படுகின்றது. 5-12 வருடங்களுக்கிடைப்பட்ட பஸ் வண்டிகளது எண்ணிக்கை 2705 ஆகும் (39%). இபோசபையில் தற்போது காணப்படுகின்ற பஸ் வண்டிகள் தொகுதியை இதே நிலைமையில் பேணிச் செல்ல வேண்டுமெனின் வருடத்திற்கு பொதுவாக 500 பஸ் வண்டிகளை இத்தொகுதியில் இணைத்தல் வேண்டும். எனினும் தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் இந்த பஸ் வண்டிகளை கொள்வனவு செய்வதற்காக இபோசபையிலுள்ள ஒதுக்குகள் போதுமானளவில் இல்லாததன் காரணமாக புதிய பஸ் வண்டிகளை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிலிருந்து ஒதுக்குகளைப் பெற்றுக் கொள்ளுதல் கடினமாகும். இதற்கு மாற்றுத் தீர்வாக பழைய 500 பஸ் வண்டிகளை திருத்தியமைத்து ஓட்டுவதற்கு இந்த கருத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்ட முன்மொழிவின் ஊடாக பஸ் வண்டிகளை திருத்தியமைப்பதற்கு பிராந்திய வேலைத்தலங்களுக்குத் தேவையான நவீன இயந்திரங்கள் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், இந்த ஒட்டுமொத்த கருத்திட்டத்திற்காக செலவாகின்ற மதிப்பீடு செய்யப்பட்ட செலவு 1700 மில்லியன் ரூபாய்களாகும்.

இந்த கருத்திட்டத்தை 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தாலும் அதற்கான திறைசேரி ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை.

- **இபோசபையின் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் கருத்திட்டம்**

உலக வங்கியின் கோவிட் 19 அவசர உதவி திட்டத்தின் கீழ் இபோசபைக்கு சொந்தமான தெரிவுசெய்யப்பட்ட டிப்போக்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் ஊடாக ஆண்களுக்கென 16 மலசலகூட கட்டமைப்புக்களையும், பெண்களுக்கென 15 மலசலகூட கட்டமைப்புக்களையும் அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 128.07 மில்லியன் ரூபாய்கள் ஏற்பாடுகளின் கீழ் உரிய திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, அமைச்சினது தொழிநுட்பப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுலாக்கப்படுவதுடன், 2022ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் அது பூர்த்தி செய்யப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை அனைத்து மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்ட போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் பெறுகை நடவடிக்கைகள் முடிவுறும் தறுவாயிலுள்ளன.

2.1.1.2. பிற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- **மின்சார பஸ் வண்டிகளை உற்பத்தி செய்யும் கருத்திட்டம்**

பசுமை எண்ணக்கருவின் கீழ் மின்சார பஸ் வண்டிகளை உள்நாட்டு போக்குவரத்து சேவைகளுக்கு அறிமுகப்படுத்தும்பொருட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிலர் தமது விருப்பத்தைத் தெரிவித்து தமது பிரேரணைகளை அமைச்சிற்கு வழங்கியுள்ளார்கள். இந்த பிரேரணை தொடர்பிலான மதிப்பீட்டு செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், உற்பத்தித் திறன் வாய்ந்த பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் தெரிவுசெய்யப்பட்ட டிப்போக்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் பயன்களைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில், சூரிய

தகடுகள் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்து அந்த நிறுவனங்களுக்கு வழங்கும் கருத்திட்ட அறிக்கையொன்று ஒரு முதலீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த முன்மொழிவிற்கு இபோசபையும், புகையிரதத் திணைக்களமும் தமது இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளன. அதனடிப்படையில், இதன் முன்னோக்கிய செயற்பாடுகள் 2022ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **தேசிய வாகன ஒழுங்குபடுத்தல் கொள்கையை தயாரித்தல்.**

இலங்கை நாட்டிற்குள் ஓட்டுவதற்காக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டில் கூட்டிப் பொருத்தப்பட்ட வாகனங்களது பதிவு தொடக்கம் பயன்பாட்டிலிருந்து அகற்றும் வரையான பல்வேறு பயன்பாட்டின்போது பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கு இழிவளவான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிலைபேறான அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் அந்த வாகனங்களை பயன்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்யும்பொருட்டு தேவையான ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டை தயாரிப்பதற்கு இந்த அமைச்சு எதிர்பார்க்கின்றது. அது 2009ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தேசிய போக்குவரத்து கொள்கைகளுக்காக தற்செயலாகப் பயன்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்டதுடன் இதுவரை அடையாளங்காணப்பட்ட பிரதான 54 விடயத் துறைகளின் கீழ் பல்வேறு தரப்பினருடன் சில செயலமர்வுகளும் நடாத்தப்பட்டு அண்ணளவான வரைவொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறையின் தற்போதைய நிலைமைகள், தேவைப்பாடுகள், சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலான விரிவான ஆய்வின் கீழ் போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனங்களது பங்களிப்பையும் பெற்று தயாரிக்கப்பட்ட இந்த தேசிய வாகன ஒழுங்குபடுத்தல் கொள்கையானது 2022ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதமளவில் வரைவு பூர்த்தி செய்யப்படுவதற்கும் அதன் பின்னர் அனுமதிக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கும் உள்ளது.

- **ஸ்மார்ட் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் ஊடாக பொதுமக்களது சேவைகளை வினைத்திறனாக்குதல்.**

இந்த அமைச்சின் நேரடி தலையீட்டின் கீழ் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் போன்ற நிறுவனங்களில் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்களது சேவைகளை வினைத்திறனாக்கும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. ஒன்லைன் முறைகள் ஊடாக நபர்களுக்கிடையிலான தொடர்புகள் மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் (On-Line Appointment), வரிசை முகாமைத்துவம்(Queue Management), இ-மோட்டரிங் கருத்திட்டம் (E-Motoring), வாகனங்களது தரவுகளை களஞ்சியப்படுத்தும் பொருட்டு, கணனிமயப்படுத்தப்பட்ட டிஜிட்டல் ஆவணக் காப்பகமொன்றைத் தாபித்தல் (Digital Archive) என்பன இதன் கீழ் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தினூடாக, முன்னரே நேரத்தை ஒதுக்கிக் கொள்ளும் முறை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- **சாரதி பயிற்சி பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல் முறையொன்றைத் தயாரித்தல்.**

இலங்கையில் சாரதி பயிற்சி ஆலோசகர்களின் கீழ் சாரதிப் பயிற்சிகளை வழங்குகின்ற சாரதி பாடசாலைகள் ஏராளமாக உள்ளன. இவை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊடாக பதிவு செய்யப்பட வேண்டுமெனினும், அவை இற்றைவரை சரியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. இது இந்நாட்டில் வாகன விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுவதற்கு காரணமாக அமையலாமாகையால்,

சாரதிப் பாடசாலைகளுக்கான வழிகாட்டல் கைந்நூலொன்றைத் தயாரித்து ஒழுங்குபடுத்துவதன் ஊடாக உயர் தரத்திலான பயிற்சியொன்றை பயிலுனர்களுக்கு வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கென மாவட்ட மட்டத்தில் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது பரிசோதனை அமைச்சின் செயலாளரின் தலைமையில், திருகோணமலை மாவட்டத்தில் நடாத்தப்பட்டது. இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளை 2022ஆம் ஆண்டிற்குள் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- **மாவட்ட போக்குவரத்து முகாமைத்துவ குழுக்களைத் தாபித்தல்.**

போக்குவரத்துத் துறை தொடர்பில் பிரதேச மட்டத்தில் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை பிரதேச மட்டத்திலேயே தீர்த்துக் கொள்ளும் நோக்கில், கௌரவ இராஜாங்க அமைச்சரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் கீழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் விதத்தில் மாவட்ட போக்குவரத்து முகாமைத்துவ குழுக்கள் நியமிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது குழு கண்டி மாவட்டத்திலும் இரண்டாவது குழு மாத்தறை மாவட்டத்திலும் தற்போது தாபிக்கப்பட்டுள்ளது.

- **நிறுவனங்களில் ஆட்சேர்ப்புத் திட்டங்களைத் தயாரித்தல்.**

இந்த அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் மற்றும் லக்திவ பொறியியல் கம்பனி ஆகிய நிறுவனங்களில், நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருக்கும் ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பான செயற்பாடுகளை உரிய நிறுவனங்களுடன் இணைந்து தயாரித்து, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு இந்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனடிப்படையில், நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதன் ஊடாக ஊழியர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், அதன் ஊடாக நிறுவனத்தின் வினைத்திறனும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

- **பஸ் வண்டி சாரதிகளுக்கு முறையான எண்ணக்கரு ரீதியானதும் செயன்முறை ரீதியானதுமான பயிற்சிகளை வழங்குதல்.**

இலங்கையில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்களது எண்ணிக்கையானது இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது உயர் நிலையில் காணப்படுவது மிகப்பாரிய சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க காரணமாக அமைந்துள்ளது. விசேடமாக ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிப்பைச் செய்கின்ற ஒரு நபர் மரணிப்பது அல்லது நிரந்தர அங்கவீனத்திற்குட்படுவது, அக்குடும்பம் நிர்க்கத்தியான நிலைமைக்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது. அத்தோடு இவ்வாறு விபத்துக்குள்ளாகும் நபர்களுள் அதிகளவானோர் இளைஞர்களாகக் காணப்படுவதால் அது இந்நாட்டின் ஊழியப்படையிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான விபத்துக்களுக்குக் காரணம் அவர்களத கவனமின்மை மற்றும் ஒழுக்கமின்மை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே ஒழுக்கமிக்கதாகவும் உரிய விதிமுறைகளுக்கமைவாகவும் வாகனங்களை ஓட்டுவதற்கு, இரண்டு வார வதிவிடப் பயிற்சியை சாரதிகளுக்கு வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை இராணுவம், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. கோவிட் நிலைமைகள் காரணமாக இவை தாமதமானாலும் 2022ஆம் ஆண்டிற்குள் இவற்றை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- **“மகமக மித்துரோ” ‘நடுவீதியில் நண்பன்’ என்ற பெயரில் தொண்டு நிறுவனமொன்றை ஆரம்பித்தல்**

வீதி விபத்துக்களுக்கான தீர்வு மற்றும் வீதிகளில் விபத்துக்கள் ஏற்பட்டதன் பின்னர், விபத்திற்குள்ளானவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு பயன்படுகின்ற “மகமக மித்துரோ” என்ற பெயரில் தொண்டு நிறுவனமொன்றை நிறுவுவதற்கு இவ்வமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தொண்டு செயற்பாடுகளுக்கு உதவ முன்வருகின்ற இளைஞர் யுவதிகளுக்கு வீதிப் பாதுகாப்பு மற்றும் முதலுதவி தொடர்பான முறையான பயிற்சிகளை உரிய நிபுணர்களைக் கொண்டு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டமானது நாடு முழுவதும் உள்ளடக்கப்படும் வகையில், 44 பிரிவுகளில் 44 குழுக்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், இதன் முதல் தொண்டு நிறுவனம் மாத்தறை மாவட்டத்தில் தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை இலக்கு 2030ஆம் ஆண்டளவில், 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்களை 50%ஆல் குறைப்பதாகும்.

- **நிறுவனத்தின் நிருவாக மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல்.**

இந்த அமைச்சின கீழ் உள்ள நிறுவனங்களது நிருவாக மற்றும் முகாமைத்துவ விடயங்களை முறைமைப்படுத்தும் நோக்கில் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில், நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் விடயப்பரப்பிற்கமைய இடம்பெறுகின்ற பொதுமக்கள் சேவைகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. அவ்வாறே காலத்தின் தேவைக்கேற்ப கட்டளைச் சட்டங்களை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், தற்போது மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை சட்டங்களை திருத்தியமைப்பதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **நிறுவனங்களை, கவர்ச்சிகரமானதும் பொதுமக்கள் விரும்பத்தக்க ஒரு சூழலுமாக மாற்றுதல்.**

அரச நிறுவனங்களை கவர்ச்சிகரமானதும் பொதுமக்கள் விரும்பத்தக்க ஒரு சூழலுமாக மாற்றுவதற்கு தேவையான ஒத்துழைப்புக்கள் மற்றும் வழிகாட்டல்களை அமைச்சினால் தொடர்ச்சியாக வழங்கப்படும். அதனடிப்படையில், தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை முறையாக பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ் சேவை பெறுநர்களுக்கு அமர்வதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் தேவையான வசதிகளை வழங்குதல், நிறுவனத்திற்குள் தொலைக்காட்சி ஊடாக அறிவுறுத்தல்களை வழங்குதல், மற்றும் நிறுவனத்தின் சேவைகள் தொடர்பில் அச்சிடப்பட்ட மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக பொதுமக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் செயற்பாடுகள் முன்னெடக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.1.1.3. சட்டங்கள் விதிமுறைகள் மற்றும் கொள்கைகளைத் தயாரித்தல்.

இந்த அமைச்சு தோற்றுவிக்கப்பட்டதன் விடயப்பரப்பிற்குள், அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளது விடயங்கள் மற்றும் செயற்பாடுகளுக்குரிய கொள்கை வகுப்புக்கள் மற்றும் உரிய சட்டதிட்டங்களை காலத்திற்கேற்ப திருத்தியமைத்தல் மற்றும் புதிய சட்டங்களை உருவாக்குதல் என்பன உள்ளடங்குகின்றன.

1. முச்சக்கரவண்டிகளை மாற்றியமைப்பதற்கான கட்டளைகளை 2021.08.14ஆந் திகதிய 2240/37ஆம் இலக்க வர்த்தமானியின் ஊடாக பிரசித்தப்படுத்தல்.
2. மோட்டார் வாகன பாதுகாப்பு தலைக்கவசத்திற்கு புதிய சட்டதிட்டங்களைத் தயாரித்தலுக்கான வரைவை சட்ட வரைஞருக்கு அனுப்புதல்.
3. வாகன ஒழுங்குபடுத்தலுக்கு அரச கொள்கைகளைத் தயாரித்தல்.
    - இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2021.11.09ஆந் திகதி போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது 25 பங்குதாரர் நிறுவனங்களது 56 பிரதிநிதிகளது பங்கேற்றலுடன் மாதாந்தம் கூட்டம் நடாத்தப்படும். 2022 செப்டெம்பர் மாதத்தில் ஆரம்ப வரைவு பூர்த்தி செய்யப்படவுள்ளது.
4. நடத்துனர் இல்லாமல் பஸ் வண்டிகளை ஓட்டுவதற்கான புதிய சட்டங்களைத் தயாரிப்பதற்கு கொள்கைரீதியான இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு மாகாண ஆளுனர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட குழுக்களிடமிருந்து ஆரம்ப வரைவு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அது அவதானிப்பிற்காக பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
5. முழுமையான செவிப்புலனற்றோருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
    - இது தொடர்பில் அடிப்படை கலந்துரையாடல்கள் சில மேற்கொள்ளப்பட்டதுடன் பிற நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.
6. வாகனங்களது வேக எல்லைகளை நிருணயிப்பதற்குரிய வரைவு பங்குதாரர்களுக்கு அவதானிப்பிற்காக அனுப்புதல்.
7. இபோசபை சட்டத்தை மாற்றியமைப்பதற்கு மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)யின் தலைமையில் நடவடிக்கைகளை எடுத்தல்.
8. இலத்திரனியல் மோட்டார் டிரைசிக்கிள் (முச்சக்கரவண்டி) பதிவு செய்யும்போது உரிய பொருள்கோடல்களை திருத்தியமைப்பதற்கான இறுதி சட்ட வரைவானது போக்குவரத்து அமைச்சரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.
9. புகைப்பரிசோதனை பொறுப்பு நிதியத்தினை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஒரு அங்கமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
10. 2017.09.22ஆம் திகதிய 2037/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக 2018.01.01 தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர்களைப் பொருத்தும் செயற்பாடுகளை மீள நடைமுறைப்படுத்தல்.
11. லக்திவ – ஏக்கலயில் அமைந்துள்ள காணிக்கு இலவச அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
12. இபோசபைக்குச் சொந்தமான காணிகளில் முழுமையான உரிமையை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பித்தல்.

2.1.1.4. சர்வதேச ஒத்துழைப்புக்களுக்கான மாநட்டிற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பை வழங்குதல்.

- **வியானா மாநாடு -**

1949 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஜெனீவா ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதுடன் 1968ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட வியானா மோட்டார் வாகன மாநாட்டிற்கு இலங்கையை உள்ளடக்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கான நிபுணர் குழுவை நியமிப்பதற்கு உரிய நிறுவனங்களிடமிருந்து பெயர்கள் கோரப்பட்டுள்ளதுடன் அதனடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் இடம்பெறும்.

தேச நிர்மாண பங்களிப்பு (NDCs) -

எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த சுற்றுச்சூழலை அமைத்துக் கொடுப்பதற்கும், சூழல் தாக்கம் காரணமாக புவி வெப்பமடைதலைத் தவிர்க்கும் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இவ்வமைச்சு தனது பங்களிப்பை வழங்குகின்றது. அதனடிப்படையில், சுற்றாடல் அமைச்சின் ஒருங்கிணைப்புடன், இவ்வமைச்சினால் இதற்குரிய நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டு தேச நிர்மாண பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டம் (National Determine Contribution - NDCs) மற்றும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2.1.2. அமைச்சு எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும்

- தனியார் வாகன பயன்பாட்டிற்கு பழக்கப்பட்டுள்ள பயணிகளை பொதுப்போக்குவரத்து சேவைகள் மட்டில் கவர்ந்திழுத்தல்.
- அரச – தனியார் பங்குபற்றுதலுடன் திட்டங்களை முன்னெடுக்கும்போது நிறுவனத்தின் சட்டதிட்டங்கள், விதிமுறைகளை திருத்தியமைப்பதற்கு நீண்ட காலமெடுத்தல்.
- பசுமை எண்ணக்கருவின் கீழ் மின்சார பஸ் வண்டிகளை அறிமுகப்படுத்தும்போது அதற்கான உயர் செலவு, பற்றரிகளை அகற்றும் செயற்பாடுகள், ஊழியர்களைப் பயிற்றுவித்தல், உட்கட்டமைப்பு வசதிகளைத் தாபித்தல்.
- ஆளனி வெற்றிடம் மற்றும் பயிற்றுவிக்கப்படாத புதிய உத்தியோகத்தர்கள் ஊடாக கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதில் ஏற்படும் சிரமம்.
- தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சேவைகளை முறைமைப்படுத்தி இபோசபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுதல்.
- நிறுவனங்களில் காணப்படும் இலஞ்ச ஊழல்களை நிறுத்தி மக்கள் விரும்பத்தக்க நிறுவனங்களாக மாற்றுதல்.
- நகர மற்றும் கிராமிய பிரதேசங்களை உள்ளடக்கும் விதத்தில் இருக்கின்ற பஸ் வண்டிகளையும் ஊழியர்களையும் முகாமைத்துவம் செய்தல்.
- ஸ்மார்ட் தொழிநுட்ப கருத்திட்டம் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டங்களுக்குத் தேவையான ஒதுக்குகளைப் பெற்றுக் கொள்வதற்குள்ள சிரமம்.
- 2030ஆம் ஆண்டளவில் 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற வீதி விபத்துக்களை 50%மாகக் குறைத்தல்.

2.1.3. அமைச்சின் எதிர்கால இலக்குகள்

- 2022 ஆம் ஆண்டில் பசுமை போக்குவரத்து எண்ணக்கருவின் கீழ் நகர போக்குவரத்திற்கு சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமான தாழ்வான அடிப்பாகத்தைக் கொண்ட அதிசொகுசு நவீன பஸ் வண்டிகளை அறிமுகப்படுத்துதல்.
- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் மற்றும் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் ஸ்மார்ட் தொழிநுட்பத்தை விரிவுபடுத்துவதன் ஊடாக பொதுமக்களது சேவைகளை வினைத்திறனாக்குதல். இதன் கீழ் Digital Archive, Q – Management, IVR, E- Motoring, D- Merit system போன்ற கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- இபோசபையின் புத்துருவாக்க நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி இபோசபையை வினைத்திறனான நிறுவனமாக மாற்றுதல்.
- Park & Ride முறையை, அதிக நெரிசலான நகர்ப்புறங்களில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பஸ் வண்டிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- அரச – தனியார் பங்குடமையின் கீழ் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து பொதுமக்களது தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- இபோசபை, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் மற்றும் லக்திவ பொறியில் கம்பனி ஆகிய நிறுவனங்களது ஆட்சேர்ப்புத் திட்டங்களை அனுமதிப்பதன் ஊடாக ஊழியர்களது பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல்.

எஸ்.எம். டி.எல்.கே.டி அல்விஸ்
செயலாளர்
வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச்
சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார்
வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

3. 2021 ஆம் வருடத்துக்கான ஒட்ட மொத்த நிதிச் செயலாற்றுகை

202l டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1. நிதி செயலாற்றுகை கூற்று

ஏசீஏ – எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

